**UAPA O.P.No.127/2023**

**PW.1** அப்துல் ரகுமான்

26-02-2026 ஆம் தேதி அன்று சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**3, 4 எதிர்மனுதாரர்களின் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு தாய்மொழி மலையாளம். தமிழ்மொழி பேசுவேன். ஆனால் எழுதபடிக்க தெரியாது. ஆங்கிலமும் எழுத படிக்க தெரியாது. மனுச்சொத்தானது 1700 சதுரடியாகும். மனு சொத்திற்கு ஐந்து உரிமையாளர்கள் இருக்கிறார்கள். எனக்கு தனிப்பட்டு பாத்தியப்பட்டது அல்ல. ஆனால் மற்ற பங்குதாரர்களை இந்த மனுவில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை. 5 ஆம் எதிர்மனுதாரர் எனக்கு எப்பொழுது அறிமுகம் என்று சொன்னால், மனு சொத்தை அவருக்கு வாடகைக்கு விடும்பொழுது அறிமுகம். 5 ஆம் எதிர்மனுதாரர் பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா இயக்கத்தில் என்ன பொறுப்பில் இருந்தார் என்று சொன்னால், அதை பற்றி எனக்கு தெரியாது. மனு சொத்தில் வாடகைக்கு வரும்முன்னர் எந்த விலாசத்தில் 5 ஆம் எதிர்மனுதாரர் குடியிருந்தார் என்று எனக்கு தெரியாது. தேதி, மாதம் நினைவில்லை, 2012 ல் வாடகைக்கு விட்டேன். மனு சொத்தை 5 ஆம் எதிர்மனுதாரருக்கு வாடகைக்கு விடும்பொழுது நான் கேரளாவில் குடியிருந்தேன். 2012 ல் நான் மனு சொத்தை பார்வையிட வரும்பொழுது 5 ஆம்

எதிர்மனுதாரர் என்னிடம் நேரடியாக வாடகைக்கு வீடு வேண்டுமென்று கேட்டார். மனு சொத்திற்கு வாடகை ஒப்பந்தம் எதுவும் போடவில்லை. அட்வான்ஸ் தொகை எதுவும் பெற்று கொள்ளவில்லை. ஒவ்வொரு மாதமும் வாடகையை தொகையாக என்னிடம் கொடுப்பார்கள். அதற்கு நான் ரசீது கொடுக்கும் பழக்கம் இல்லை. பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா பலாயிரம் நபர்களை உறுப்பினர்களாக கொண்ட ஒரு இயக்கம் என்று சொன்னால், அதை பற்றி எனக்கு தெரியாது. பொதுவாக பொது அமைப்புகளை நிர்வாகம் செய்யும்பொழுது வரவு, செலவு செய்தால் அதற்குரிய ஆவணங்களை பராமரிக்கவேண்டும் என்று சொன்னால், சரிதான். வரவு செலவுகளை அந்த உறுப்பினர்களிடமும் காட்டவேண்டும் என்று சொன்னால், சரிதான். முன்பின் அறிமுகம் இல்லாதவர்களுக்கு வீட்டை முன்பணம் பெற்று கொள்ளாமல் யாரும் வாடகைக்கு விடமாட்டார்கள் என்று சொன்னால் சரிதான். ஆனால் சமூக அமைப்பு என்று கூறியதால் வாடகைக்கு விட்டேன். பொது அமைப்பானது பொதுவாக வாடகை ஒப்பந்தம் இல்லாமல் வாடகைக்கு வரமாட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. வாடகை ரசீதும் வாங்காமல் இருக்கமாட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. மனு சொத்தை 5 ஆம் எதிர்மனுதாரருக்கு நான் வாடகைக்கே கொடுக்கவில்லை என்றும், பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியாவின் ஆதரவாளர் நான் என்பதால் பணம் எதுவும் பெற்றுக் கொள்ளாமல் வீட்டை பயன்படுத்த கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. அவர்களின் பயன்பாட்டை தெரிந்தே நான் மனு சொத்தை அவர்களுக்கு

வாடகைக்கு விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. மனு சொத்தை வாடகைக்கு கொடுத்ததாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. உண்மையிலேயே மனு சொத்தை வாடகைக்கு கொடுத்திருந்தால் அதற்குரிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. 13-10-2022 ல் மனு சொத்திற்கு சீல் வைக்கப்பட்டது. இந்த மனுவை 26-11-2022 ல் தாக்கல் செய்தேன். இந்த மனுவை 04-01-2023 ல்தான் நான் தாக்கல் செய்தேன் என்று சொன்னால், அதற்கு முன்னர் கிரிமினல் வழக்கு தாக்கல் செய்தேன். பின்னர் இந்த வழக்காக அது மாற்றப்பட்டது. சட்டப்படி பாதிக்கப்பட்ட நான் 30 நாட்களுக்குள் மனு தாக்கல் செய்திருக்கவேண்டும் என்று சொன்னால், சரிதான். நானும் 30 நாட்களுக்குள் மனு தாக்கல் செய்தேன். நான் கூறுவது தவறு என்றும், 30 நாட்களுக்குள் நான் மனு தாக்கல் செய்யவில்லை என்றும், அதனால் எனது மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. சட்டப்படி தடை செய்யப்பட்ட இயக்கத்தால் பயன்படுத்தப்படாத இடமாக இருந்தால் மட்டுமே இந்த மனுவை தாக்கல் செய்ய முடியும் என்று சொன்னால் சரியல்ல. நான் எனது மனுவில் மனு சொத்தை பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா பயன்படுத்தி வந்ததாக குறிப்பிட்டுள்ளதால் இந்த மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தடை செய்யப்பட்ட இயக்கத்தின்மீது அந்த தடையை அரசு நீக்கினால் மட்டுமே மனு சொத்தை நான் திருப்பி கேட்க இயலும் என்று

**சொன்னால் சரியல்ல. நான் கேட்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும், எனது மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.**

**<u>5 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** **இல்லை**

sd/ அப்துல் ரகுமான்

Taken down by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/G.Vijaya,
Principal District Judge,
Coimbatore.